# யூன் – 19 - திங்கள்

**புனித றெமுவால்ட்**

**ஆண்டவர்தம் மீட்பை அறிவித்தார்: பிற இனத்தார் கண்முன்னே தம் நீதியை வெளிப்படுத்தினார். திபா. 98:2**

## முதல் வாசகம் : 2 கொரிந்தியர் 6 : 1 – 10

சகோதர சகோதரிகளே! ங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக் கொண்ட அருளை வீணாக்க வேண்டாம் என அவரோடு இணைந்து உழைக்கும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். ”தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன் விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்” எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்! எவரும் குறைகூறா வண்ணம் எங்கள் திருப்பணியை ஆற்ற விரும்புகிறோம். எனவே நாங்கள் எவருக்கும் இடையூறாக இருப்பதில்லை. மாறாக அனைத்துச் சூழ்நிலைகளிலும் நாங்கள் கடவுளின் பணியாளர்கள் என்பதை எங்கள் நடத்தையால் காட்டுகிறோம் வேதனை, இடர், நெருக்கடி ஆகியவற்றை மிகுந்த மன உறுதியோடு தாங்கி வருகிறோம். நாங்கள் அடிக்கப்பட்டோம் சிறையில் அடைக்கப்பட்டோம் குழப்பங்களில் சிக்கினோம் பாடுபட்டு உழைத்தோம் கண்விழித்திருந்தோம் பட்டினி கிடந்தோம் தூய்மை, அறிவு, பொறுமை, நன்மை, தூய ஆவியின் கொடைகள், வெளிவேட மற்ற அன்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கிறோம். உண்மையையே பேசி வருகிறோம் கடவுளின் வல்லமையைப் பெற்றிருக்கிறோம். நேர்மையே எங்கள் படைக்கலாம். அதை வலக்கையிலும் இடக்கையிலும் நாங்கள் தாங்கியுள்ளோம். போற்றுவார் போற்றலும் தூற்றுவார் தூற்றலும் எங்களுக்கு ஒரு பொருட்டல்ல் புகழுவார் புகழலும் இகழுவார் இகழலும் எங்களைப் பாதிப்பதில்லை. ஏமாற்றுவோர் என அவர்களுக்குத் தோன்றினாலும் நாங்கள் உண்மையான பணியாளர்கள். அறிமுகமில்லாதோர் எனத் தோன்றினாலும் எல்லாரும் எங்களை அறிவர். செத்துக் கொண்டிருப்பவர்கள் எனத் தோன்றினாலும் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கொடுமையாகத் தண்டிக்கப்பட்டோர் எனத்தோன்றினாலும் நாங்கள் கொல்லப்படவில்லை. துயருற்றோர் எனத் தோன்றினாலும் நாங்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கிறோம். ஏழையர் எனத் தோன்றினாலும் நாங்கள் பலரைச் செல்வராக்குகிறோம். எதுவும் இல்லாதவர் எனத்தோன்றினாலும் நாங்கள் எல்லாவற்றையும் பெற்றிருக்கிறோம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மீட்பை அறிவித்தார்

## நற்செய்தி : மத்தேயு 5 : 38 – 42

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: கண்ணுக்குக் கண்“, “ பல்லுக்குப் பல்“ என்று கூறப்பட்டிருப் பதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் தீமை செய்பவரை எதிர்க்க வேண்டாம். மாறாக, உங்களை வலக் கன்னத்தில் அறைபவருக்கு மறுகன்னத்தையும் திருப்பிக் காட்டுங்கள். ஒருவர் உங்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்து, உங்கள் அங்கியை எடுத்துக்கொள்ள விரும்பினால் உங்கள் மேலுடையையும் அவர் எடுத்துக் கொள்ள விட்டு விடுங்கள். எவராவது உங்களை ஒரு கல் தொலை வரக் கட்டாயப்படுத்தினால் அவரோடு இரு கல் தொலை செல்லுங்கள்.

உங்களிடம் கேட்கிறவருக்குக் கொடுங்கள் கடன் வாங்க விரும்புகிறவருக்கு முகம் கோணாதீர்கள்“ என்றார்.

**தியானம்:** உலகிலே தலைசிறந்து அன்பு. அன்பு இல்லையேல் வேறு ஒன்றுமில்லை. இறைவன் எமக்கு பலவகையான தாலந்துகளைக் கொடுத்திருக்கின்றார். எவ்வாறான இடஞ்சல்கள், இடையூறுகள் வந்தாலும் இறைவனுக்கேற்ற வகையில் பணியினை செய்ய வேண்டுமென்றும் இன்றைய வாசகங்கள் கூறுகின்றன. “நீங்கள் பெற்றுக் கொண்ட அருளை நீங்கள் இழக்க வேண்டாம்” இதுவே தகுந்த காலம், இதுவே மீட்பின் நாள். எவரும் குறை கூறா வண்ணம் திருப்பணியை ஆற்றுங்கள் என்று புனித பவுல் கொரிந்து நகர மக்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.(2கொரி.6:1-3). இன்று இறைமகன் இயேசு எங்களையும் அழைத்து பலவிதமான பணிகளை அவர்களுக்கேற்ற வகையில் கொடுத்திருக்கின்றார். நாங்கள் மற்றவர்கள் பார்க்க வேண்டுமென்று வெளிவேடத்திற்காக செய்யாமல் ஆவியானவரின் கனிகளாலும், கொடைகளாலும் நிரப்பப்பட்டவர்களாக இறைவனுக்கேற்ற வகையில் செயற்படுத்த வேண்டும். மேலும் நற் செய்தி வாசகமானது எம் வாழ்விலே முக்கியமாகக் காணப்பட வேண்டிய அன்பைப்பற்றி வெளிப்படுத்துகின்றது. ஏனெனில் அன்பானது பொறுமையுள்ளது, பரிவுள்ளது, தன்னலத்தை நாடாது, இறுமாப்பு அடையாது, சீற்றத்திற்கு இடம் கொடாது.....இவ்வாறு இறைவார்த்தையில் பார்க்கின்றோம். அவ்வன்பு எம்மத்தியில் காணப்படுமாயின் புரிந்துணர்வு, ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இவைபோன்ற நற்குணங்கள் காணப்படும். ஆனால் இவை எம் மத்தியில் காணப்படவில்லையென்றால் பிரிவினைகள், சண்டை சச்சரவுகள்தான் காணப்படும். இவற்றில் இருந்து நாங்கள் விலகி வாழ, எமக்கு எதிராக கூறப்படும் அவதுாறுகளை ஏற்றுக்கொண்டு, மனம் வேதனைப்பட்கூடியதான வார்த்தைகளால் மற்றவர்கள் கூறினாலும் மன்னித்து அவர்களை எமது சகோதர, சகோதரிகளாக ஏற்று வாழ வேண்டும். அவர்களுக்காக மன்றாடவேண்டும். “உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள், உங்களைத் துன்புறுத்துவோருக்காக மன்றாடுங்கள்” (மத்.6:44)ல் எனவே இவற்றை மனதில் கொண்டு மற்றவர்களுக்கு உதவி செய்வதோடு நின்றுவிடாது, அவர்கள் இன்ப துன்பங்களிலும் பங்குபற்றி ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் அன்பு செய்து வாழ்வோம்.